# நாமகிரிப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர். திரு.மு.ஆறுமுகம்.,B.A., B.L.,

ந.க.எண்.73/2024 நாள். .06.2024

பொருள்: மனைப்பிரிவு – பேரூராட்சிகள் நிர்வாகம் – நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டை பேரூராட்சி – வார்டு எண்.12 வேங்காத்தா காலனி சர்வே எண்.17/1B, 17/2B மற்றும் 17/3இல் 1.35 ஏக்கர் (அ) 5459 சதுரடி மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதியுடன் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி அளவில் இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் 78, 79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, [UD4(3)], நாள்: 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [UD4(3)] நாள்:13.10.2017.
3. அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை[UD4(3)] நாள்:09.12.2020.
4. அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை[UD4(3)] நாள்:16.07.2022.
5. அரசாணை எண் 138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, [UD4(3)], நாள்: 04.06.2004.
6. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/எல்.எ.2, நாள்.30.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
7. நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத் உதவி இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண்./NKL/35IHVQB/4244/2024/TCPநாள்:31.05.2023, (SWP/DTCP/Namakkal/Layout No.203/2023).
8. திரு.பா.ஜெஷ்வந்த் (த/பெ). பாலசுப்ரமணியம், க.எண்.31/2, தேர்வீதி, நா.பேட்டை என்பவரின் விண்ணப்ப நாள்.29.02.2024.
9. நாமகிரிப்பேட்டை பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.324(26)/2024 நாள்.06.03.2024.
10. நாமகிரிப்பேட்டை சார்பதிவாளர் அலுவலக தான பத்திர ஆவண எண்.991/2023 நாள்.19.04.2023.
11. பேரூராட்சி அலுவலகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வளர்ச்சிக் கட்டண செலுச்சீட்டு எண். /2024–25 நாள். .06.2024.
12. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 மற்றும் நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023.
13. தொடர்புடைய ஆவணங்கள்.

* * * * * *

**உத்திரவு**

பார்வை (1),(2),(3) மற்றும் (4) இல் காணும் அரசாணைகளின் படியும், பார்வை (5) இல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவின்படியும், நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 அரியாக்கவுண்டம்பட்டி கிராமம், வேங்காத்தா காலனி மேற்கு பகுதி சர்வே எண்.17/1B, 17/2B மற்றும் 17/3இல் அமையும் 1.35 ஏக்கர் (அ) 5459 சதுரடி மீட்டர் இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு பார்வை (7) இல் காணும் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனை பிரிவிற்கான SWP/DTCP/Namakkal/Layout No.203/2023 என எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற குடியிருப்பு மனைபிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலினை செய்யப்பட்டு பார்வை (5) இல் காணும் அரசாணையின்படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்க்கெட் வால்யூ கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்தும்.

த.பி.பா…,

Scanned with OKEN Scanner

## அட்டவணை - I

| வ. எண் | மனை அமைந்துள்ள இடத்தின் விவரம் மற்றும் மனையின் பெயர் | அமைந்துள்ள சர்வே எண்கள் | மனை எண்கள் | மொத்த சதுர அடி | மொத்தசதுர மீட்டர் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.12, வேங்கத்தார் காலனி | 17/1B, 17/2B மற்றும் 17/3 | 1 | 1725.00 | 160.32 |
| 2 | | | 2 | 1500.00 | 139.41 |
| 3 | | | 3 | 1250.00 | 116.17 |
| 4 | | | 4 | 1250.00 | 116.17 |
| 5 | | | 5 | 1250.00 | 116.17 |
| 6 | | | 6 | 1487.50 | 138.24 |
| 7 | | | 7 | 1831.00 | 170.17 |
| 8 | | | 8 | 1290.00 | 119.89 |
| 9 | | | 9 | 1436.25 | 133.48 |
| 10 | | | 10 | 1487.50 | 138.24 |
| 11 | | | 11 | 1250.00 | 116.17 |
| 12 | | | 12 | 1250.00 | 116.17 |
| 13 | | | 13 | 1250.00 | 116.17 |
| 14 | | | 14 | 1250.00 | 116.17 |
| 15 | | | 15 | 1500.00 | 139.41 |
| 16 | | | 16 | 1537.50 | 142.89 |
| 17 | | | 17 | 1613.00 | 149.91 |
| 18 | | | 18 | 1400.00 | 130.11 |
| 19 | | | 19 | 1250.00 | 116.17 |
| 20 | | | 20 | 1250.00 | 116.17 |
| 21 | | | 21 | 1487.50 | 138.24 |
| 22 | | | 22 | 3010.00 | 279.74 |
| 23 | | | 23 | 1973.00 | 183.36 |
| 24 | | | 24 | 1250.00 | 116.17 |
| 25 | | | 25 | 1250.00 | 116.17 |
| 26 | | | 26 | 2262.50 | 210.27 |
| 27 | | | 27 | 3496.45 | 324.95 |
| 28 | | | 28 | 971.00 | 90.24 |
| மொத்தம் | | | | **43758.20** | **4067** |

## அட்டவணை - II

| வ.எண் | கட்டண விவரம் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பக் கட்டணம் | 28 X 1000 | 28000 |
| 2 | மனைப்பிரிவு மற்றும் தெரு அமைத்தல் கட்டணம் | 1000 ச.மீ (அல்லது) அதன் பாகத்திற்கு ரூ.1500/- வீதம் 5459.00 ச.மீ (1%) | 81885 |
| 3 | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் | 5459 ச.மீ X ரூ.1.50 | 8190 |
| 4 | மறு வகைபாடு கட்டணம் | 1X20,000 ஏக்கர் X ரூ.1.35 | 27000 |
| 5 | அரசு வழிகாட்டு நில மதிப்பீட்டு தொகையில் 3 சதவிகிதம் (ஒரு ஏக்கர் மதிப்பு 5,50,000/– வீதம் 1.00 ஏக்கருக்கு) | ரூ.5,50,000 X 3% (1.35 ஏக்கர்) | 22275 |
| 6 | தெருவிளக்கு அமைத்தல் மதிப்பீடு கட்டணம் (புதிய விளக்குகள் உள்பட) | 3 எண்ணிக்கைகள் | 39600 |
| 7 | டேவணித் தொகை | ஏக்கர் ரூ.1,00,000 | 100000 |
| மொத்தம் | | | **306950** |

த.பி.பா...,

மனுதாரர் மேற்கண்ட அட்டவணை 1இல் குறிபிட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள இருபத்து மூன்று (23) மனைகளுக்கு வரன்முறைப்படுத்திட, அட்டவணையில் 2இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி உரிய கட்டண தொகை ரூ.306950/- பேரூராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவில் 1. சூரிய ஒளிவிளக்கு, 2. ஆழ்துளை கிணறு, 3. குடிநீர் பைப்லைன் மற்றும் 4. தெருவிளக்கு ஆகிய அடிப்படை வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சர்வே எண்.17/1B, 17/2B மற்றும் 17/3 இல் அமையும் 1.35 ஏக்கர் (அ) 5459 சதுரடி மீட்டர் இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவில் மனை எண்கள். 1 முதல் 23 வரையிலான மனைகளை கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இதன் வழி உத்திரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1 அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி துறை நாள்.13.10.2017 இல் விதி எண்.7(g) (ii) இன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2 பார்வை (6) இல் காணும் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.

3 உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றியமைத்தல் கூடாது.

4 ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. ஆபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.

5 நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்டதொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

6 மேலும், மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் உண்மைக்கு புறம்பான தகவல் ஏதுமிருப்பின், இவ்வுத்தரவு எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படுவதுடன், உரிய மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதையும் இதன் வழி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

7 மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

8 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 மற்றும் நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 இன்படி அரசால் அவ்வபோது அறிவிக்கப்படும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

28/6/24

செயல் அலுவலர் (கூ.பொ),
நாமகிரிப்பேட்டை பேரூராட்சி,
நாமக்கல்மாவட்டம்.

பெறுநர்

திரு.பா.ஜெஷ்வந்த்
(து/பெ). பாலசுப்ரமணியம்,
க.எண்.31/2, தேர்வீதி,
நாமகிரிப்பேட்டை – 637406
நாமக்கல் மாவட்டம்.

நகல்

1 சேலம் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2 நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3 அலுவலக கோப்பிற்கு.

Scanned with OKEN Scanner